# யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

## தேசிய பாடசாலை

# வருடாந்தப் பரிசளிப்பு விழா–2011

( பழைய மாணவர் சங்க அனுசரணையுடன் )

**2012.12.07**

தொலைபேசி இல.: 021 226 3017, தொலைநகல் : 021 226 4141, இணையத்தளம் : nelliadycentral.com , மின்னஞ்சல் : nelliadymmv@gmail.com

# யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

## தேசிய பாடசாலை

# வருடாந்தப் பரிசளிப்பு விழா

## 2011

காலம் : 2012.12.07, வெள்ளிக்கிழமை –மு.ப.9.30

இடம் : கல்லூரிக் கலையரங்கு

தலைவர்
**திரு.செ.சேதுராஜா அவர்கள்**
அதிபர்

பிரதம விருந்தினர்
**திரு.சி.சத்தியசீலன் அவர்கள்**
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு
வடமாகாணம்.

பரிசில் வழங்குபவர்
**திருமதி.இராஜராஜேஸ்வரி சத்தியசீலன் அவர்கள்**

## நிகழ்ச்சிகள்

1. விருந்தினர் அழைப்பு
2. கொடிகள் ஏற்றுதல்
(தேசியக்கொடி. பாடசாலைக்கொடி)
3. மங்கல விளக்கேற்றல்
4. தமிழ்த்தாய் வாழ்த்து
5. வரவேற்பு நடனம்
6. ஆசியுரைகள்
பிரம்மஸ்ரீ.இ.ரெங்கநாதக் குருக்கள்
(பிரதம குரு-நெல்லியடி தடங்கள் புளியடி முருகமூர்த்தி ஆலயம்)

   அருட்பணி எமில்போல்
(பங்குத் தந்தை, கரவெட்டி)
7. வரவேற்புரை
திரு.க.கிருஷ்ணகுமார்
(பிரதி அதிபர் - நிர்வாகம்)
8. வாழ்த்துரைகள்
திரு.இ.ஐயாத்துரை
(தலைவர், பழைய மாணவர் சங்கம்)

   திரு.க.தில்லைநாதன்
(செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்)

   திரு.சி.நந்தகுமார்
(வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி)
9. தலைமையுரை / அதிபர் அறிக்கை
திரு.செ.சேதுராஜா (அதிபர்)
10. பரிசில் வழங்கல்
திருமதி.இராஜராஜேஸ்வரி சத்தியசீலன்
11. பிரதம விருந்தினர் உரை
திரு.சி.சத்திசீலன்
12. மாணவர் நிகழ்வுகள்
மாணவ முதல்வன் உரை - கி.பிரணவன்
ஆங்கில உரை - செல்வி.செ.சஞ்சிகா
நாட்டிய நாடகம் - "சிலப்பதிகாரம்"
இசை நிகழ்ச்சி - கலை. வர்த்தகப் பிரிவு மாணவர்கள்
13. நன்றியுரை
திரு.அ.அரியரத்தினம்
(பிரதி அதிபர் - கல்வி அபிவிருத்தி)
14. கல்லூரிக் கீதம்

## மகுடவாசகம்

"அறிவு ஔிர சால்பு சிறக்க"

## கல்லூரியின் நோக்கு

"அறிவும் ஆக்கமும் ஆளுமைத்திறனும் மானிட மாண்பும் மிளிரும்
இருபத்தோராம் நூற்றாண்டுக்கான சமூகத்தை உருவாக்கும்
உயர் கல்லூரியாக மலர்தல்"

## கல்லூரியின் பணிக்கூற்று

" சமகால எதிர்காலக் கல்வித் தேவைகளை
தேசிய மற்றும் சர்வதேசரீதியில் நிறைவு செய்யும் வகையில்,
வினைத்திறன்மிக்க கள, வள, வசதிகளை ஏற்படுத்தி
ஒரு தலைசிறந்த கல்லூரியாக, உயர்ந்து
வடமராட்சி மற்றும் ஏந்து பிரதேச மக்களது
மகிழ்ச்சிகரமான வாழ்வுக்கான செயற்பாடுகளை
விளைதிறனுடன் முன்னெடுத்தல் "

## Motto

*"Let Knowledge radiate; Culture burgeons"*

## The vision of the college

*"Blossoming as Higher college,
to shape a fitting society for the twenty - one century,
which combines knowledge, creative skills, personality and human dignity"*

## Mission Statement

*"A unique college, fulfilling at both national and Inter-national levels,
the contemporary and future educational needs
with efficient field and resourceful facilities,
to uphold the happy life of people in vadamaradchi and catchments areas."*

# யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
## தேசிய பாடசாலை
## பரிசளிப்பு விழா – 2011
## அதிபர் அறிக்கை

வணக்கத்துக்குரிய மதகுருமார்களே! பெரு மதிப்பிற்குரிய உயர்திரு.சிவலிங்கம் சத்தியசீலன் அவர்களே! அவர்களது பாரியார் திருமதி இராஜேஸ்வரி சத்தியசீலன் அவர்களே! மதிப்பு மிகு மாகாணக் கல்விப்பணிப்பாளர் அவர்களே! மதிப்பு மிகு வலயக்கல்விப் பணிப்பாளர் அவர்களே! பிரதிக் கல்விப் பணிப்பாளர்களே! உதவிக் கல்விப் பணிப்பாளர்களே! ஆசிரிய ஆலோசகர்களே! ஏனைய திணைக்களம் சார் அதிகாரிகளே! கல்வியியலாளர்களே! மதிப்பிற்குரிய பெற்றோர்களே! ஆசிரியர்களே! அன்பான மாணவர்களே! கல்லூரியின் பழைய மாணவர்களே! பழைய மாணவர் சங்கத் தலைவர் அவர்களே! அங்கத்தவர்களே! நலன் விரும்பிகளே! பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே! நலன் விரும்பிகளே! பெரியோர்களே! தாய்மார்களே! அனைவருக்கும் வணக்கம்.

இன்றைய விழாவின் நாயகனும் எமது வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளருமாகிய உயர்திரு. சிவலிங்கம் சத்தியசீலன் அவர்கள் அவர்தம் பாரியார் திருமதி.இராஜேஸ்வரி சத்தியசீலன் சகிதம் வருகைதந்து சிறப்பித்து எமது மாணவச் செல்வங்களுக்கு பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கி வாழ்த்துரைக்க இருப்பதையிட்டு எமது கல்லூரிச் சமூகம் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றது. திருவாளர் சத்தியசீலன் அவர்கள் இந்நிகழ்விற்கும் இவ்வமர்விற்கும் மிக்க பொருத்தமுடையவரென எமது கல்லூரிச் சமூகம் கருதுகின்றது. ஒரு ஆசிரியராக தனது பொதுப்பணியை ஆரம்பித்த இவர் தனது திறமையாலும் நுண்ணறிவாலும் விடாமுயற்சியாலும் இலங்கை நிர்வாக சேவையில் பிரவேசித்து வவுனியா மாவட்டத்தில் உதவி அரசாங்க அதிபராக அரும்பணியாற்றியவர். வவுனியா நகரம் கிராமியப் பாங்காக இருந்து நகரப் பாங்கிற்கு மாறிய அபரிமிதமான வளர்ச்சிக் காலத்தில் அவ்வளர்ச்சியில் பங்கேற்ற அனுபவமுடையவர். அதன் பின்னர் எமது பிரதேசமான கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலராக சிறப்பாகப் பணியாற்றி அகில இலங்கை ரீதியில் பிரதேச செயலகங்களுக்கிடையே மேற்கொள்ளப்பட்ட சிறந்த முகாமைத்துவ மற்றும் சமூக சேவை செயற்றிட்டங்களுக்கான தெரிவில் தேசியரீதியில் இரண்டாவது இடம்பெற்று ஜனாதிபதியின் பதக்கத்தினையும் எல்லோரது பாராட்டுக்களையும் பெற்ற சாதனையாளர். கரவெட்டிப் பிரதேசத்திற்கு அவராற்றிய பணியும் அவர்தம் பணியாளர்களுக்கு அவர் வழங்கிய வழிகாட்டல்களும் பெறுமதி மிக்கவையும் முன்னுதாரணமானவையுமாகும். பிரதேச செயலராக இருந்தபோது கல்வித்துறையில் அவர் காட்டிய அக்கறையும் கொண்ட ஆவலும் எமது மாகாணக் கல்விச் செயலாளராக அவர் உயர்வதற்குக் காரணமாயின. அவர்தம் பாரியார் திருமதி. இராஜேஸ்வரி சத்தியசீலன் அவர்கள் கல்வி அவாவுடைய ஒரு ஆசிரியராக பணியாற்றுவதும் வீட்டிலும் வேலை தவிர்ந்த நேரங்களிலும் நல்ல ஆலோசனைகளை வழங்குவதும் இதற்குக் காரணமாகலாம். இவர் புகழ்பூத்த இக்கல்லூரியின் பழைய மாணவியாவார்.

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் தேசிய பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டு ஓராண்டு பூர்த்தியடைந்த நிலையில் கொண்டாடப் படுகின்ற இன்றைய பரிசுத் தினமானது தனிச்சிறப்பு மிக்கதாகும். ஒரு மாதிரிப் பாடசாலையாக 1921 இல் ஆரம்பிக்கப்பட்டு ஒரு மத்திய மகா வித்தியாலயமாகத் தரமுயர்ந்து, நவோதயப் பாடசாலையாக, யுனெஸ்கோ பாடசாலையாக, சக்திவள முகாமைத்துவப் பாடசாலையாக, சிறந்த கற்றாடல் பாடசாலையாகப் பரிணமித்து இன்று வடமராட்சிப் பிரதேச மக்களனைவருக்கும்

சொந்தமான ஒரு தேசியப் பாடசாலையாக இக்கல்லூரி தரமுயர்ந்து நிற்கின்றது. கடந்த 2011.10.06 தொடக்கம் இக்கல்லூரியானது மத்திய கல்வி அமைச்சினால் மதிப்பிடப்பட்டு தேசிய பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது. இக்கல்லூரியின் வளர்ச்சி வரலாற்றில் இதுவோர் மைற்கல்லாகும். இதற்காக உழைத்த அதிகாரிகள், அமைச்சர்கள், வடமாகாண ஆளுநர், ஆகியோருக்கும் பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பாடசாலை நலன் விரும்பிகள் அனைவருக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

பாடசாலை ஆசிரியர்கள், பிரதி அதிபர்கள், பகுதித்த லைவர்கள், மாணவர் தலைவர்கள், மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர் சங்கத்தினர், நலன்விரும்பிகள், கல்விப்புல அதிகாரிகள் முதலானோரின் அளப்பரிய உழைப்பினாலும் ஒத்துழைப்பினாலும் பல சாதகமான வள நிலைகளையும் அடைவுகளையும் சுமந்து இன்னும் ஓரிரு வருடங்களில் தேசிய ரீதியில் முன்னிலை வகிக்கக்கூடிய பல முன்னேற்றச் சுட்டிகளை இக்கல்லூரி காட்டி நிற்கின்றது. மாணவர்களின் பாடவிதான, இணைப் பாடவிதானச் சாதனைகளும் இதற்கான எடுத்துக்காட்டுக்களாகும். க.பொ.(சா/த) அடைவு மட்டத்தில் 2010ஆம் ஆண்டில் 64% இலிருந்த சித்திவீதம் 2011 டிசம்பரில் 88% ஆக அதிகரித்துள்ளமையானது சிறப்பானதொரு அபிவிருத்தி வீச்சினைக் காட்டி நிற்கின்றது. 2012ஆம் ஆண்டில் இக்கல்லூரியில் 15 வயதுக்குட்பட்ட பெண் கபடி அணியினர் தேசிய ரீதியில் முதலாமிடம் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்தனர். பல 10 வருடங்களின் பின்னர் வடமராட்சிப் பிரதேசத்தில் பாடசாலை மாணவர் அணியொன்று தேசிய ரீதியில் முதலாமிடம் .பெற்றுள்ளமையை அனைவரும் புகழ்ந்து பாராட்டியுள்ளனர். வடக்கு மாகாணத்திற்கும் இச்சாதனை பெருமை சேர்த்தது. மேலும் இவ்வாண்டின் சிறந்த பாடசாலை அபிவிருத்திச் சங்க நடைமுறைக்கும் கணக்கறிக்கைக்கும் அபிவிருத்திச் செயற்பாடு களுக்குமாக AAT நிறுவனமும் கல்வி அமைச்சும் இலங்கையிலுள்ள அனைத்துத் தேசியப் பாடசாலைகளுக்குமிடையேயும் நடத்திய போட்டியில் மாவட்ட மட்டத்தில் மிகச்சிறந்த அறிக்கைக்கான சான்றிதழை எமது கல்லூரி பெற்றுக்கொண்டது. இவற்றோடு சிறந்த சக்திவள முகாமைத்துவப் பாடசாலையாகவும் மதர் ஸ்ரீலங்கா செயற்றிட்டப் பாடசாலையாகவும் யுனெஸ்கோ பாடசாலையாகவும் பாராட்டுக்களைப் பெற்று தேசிய மட்ட நிகழ்ச்சிகளிலும் எமது பாடசாலை மாணவ அணியினர் பங்கேற்று முன்னிலைப் படுத்திப் பாராட்டப்பட்டனர். மாகாண மட்ட மற்றும் தேசிய மட்ட கணிதப் புதிர்ப் போட்டியிலும் மாகாண மட்ட விஞ்ஞானப் போட்டிகளிலும் எமது மாணவர்கள் வருடாவருடம் பங்குபற்றி வெற்றிச் சாதனைகளைப் படைத்து வருகின்றனர். 2012இல் *Australian National Chemistry Quiz* பரீட்சையில் எமது கல்லூரி மாணவன் செல்வன் கலாமணி மதனாகரன் இரண்டாவது இடத்தினைப் பெற்று எமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார். 2012 இல் அகில இலங்கை ரீதியில் தலைமைத்துவத் திறன் மிக்க மாணவர் தெரிவுக்காக ZONTA International அமைப்பினால் நடத்தப்பட்ட போட்டியில் தரம் 12 வகுப்பைச் சேர்ந்த செல்வி சஞ்சிகா செல்வராசா இரண்டாமிடத்தினைப் பெற்று ஹொட்டேல் தாஜ் சமுத்திராவில் நடந்த நிகழ்வில் சிறப்பான கௌரவத்தினைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்தார். இதுவரையில் இப்போட்டியில் இடம்பிடித்த முதல் தமிழ் மாணவி இவரேயாவார்.

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சிறந்த அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கான மதிப்பீட்டின் அடிப்படையில் வழங்கப்படும் தேசிய விருதான “குரு பிரதீபா பிரபா” விருது, 2011 மற்றும் 2012 ஆகிய இரு ஆண்டுகளிலும் எமது கல்லூரிக்குக் கிடைத்திருந்தன. சிறந்த அதிபருக்கான “பிரதீபா பிரபா” விருதுகளும் (2011, 2012) சிறந்த ஆசிரியர்களுக்கான “குரு பிரதீபா பிரபா” விருது திருமதி.இரஞ்சினி சிவராஜா (2011, 2012) அவர்களுக்கும் திரு.வீ.சுதர்சன் (2012) அவர்களுக்கும் கிடைத்திருந்தன.

சுற்றாடல் மேம்பாட்டிலும் சுற்றுப்புற அழகிலும் மாவட்டத்திலேயே முன்னிலைப் பாடசாலை யாகவும் விவசாயப் போட்டிகளில் மாவட்டத்தில் இரண்டாமிடத்தினைப் பெற்று சிறந்த விவசாயப் பாடசாலையாகவும் திகழும் இக்கல்லூரியானது இவ்வாண்டில் சிறப்பான உயிர்ச் சூழலை ஏற்படுத்தும் முயற்சியில் பாற்பண்ணை, பறவையினம், ஏனைய மிருக வளர்ப்பு என்பவற்றை ஆரம்பித்து வெற்றிகரமான ஓர் பூரண பாடசாலைச் சுற்றுச் சூழலை ஏற்படுத்தி மாணவர்களும் ஆசிரியர்களும்

பெற்றோரும் மனமகிழ்ந்து பணிபுரிந்து நடமாடும் அழகுநிலை உருவாக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஆண்டில் மாணவர்களுக்கான போஷாக்குப் பால் வழங்கும் திட்டத்திற்கு எமது பாற்பண்ணையில் இருந்தே பால் வழங்குவதற்குத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. அதேபோன்று மாணவர்களுக்கான மதிய உணவிற்குத் தேவையான மரக்கறி வகைகளை தற்போது பாடசாலைத் தோட்டத்திலிருந்தே பெற்றுவரும் நிலையில் அத்தேவையினை முழுமையாக பாடசாலையிலிருந்தே நிறைவு செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. தற்போது பாடசாலைத் தோட்டத்திலிருந்து பழ வகைகளும் கீரை வகைகளும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விற்பனை செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

பழைய மாணவர் சங்கத்தின் உதவியுடன் மறுசீரமைக்கப்பட்ட சிற்றுண்டிச் சாலையானது முழு அளவில் தொழிற்பட்டு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் தேவைகள் திருப்திகரமாக பூர்த்தி செய்யப்படுகின்றன. சிறப்பான நூலகம், அழகிய கலையரங்கம், விஸ்தரிக்கபட்ட விளையாட்டு மைதானம், புரணமான நீர் வழங்கல் சேவை முதலியவற்றோடு ஆசிரிய சங்கத்தினாலும் அபிவிருத்திச் சங்கத்தினாலும் அமைக்கப்பட்ட நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தின் மூலம் அன்றாடம் பெறப்படும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மாணவருக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

எமது கல்லூரியின் மதிப்பு மிகு நலன்விரும்பியும் தொழிலதிபருமான நெல்லியடி திரு.நடேசு பாஸ்கரன் அவர்களும் அவர்தம் பாரியார் திருமதி.இந்திராணி பாஸ்கரன் அவர்களும் ஏலவே ஆற்றிய பல அரும்பணிகளுக்கு மேலாக தாமாகவே முன்வந்து பல லட்சரூபா செலவில் கல்லூரியின் முகப்பில் அமைத்துத் தந்த முக்காலமும் உணர்ந்த வித்தகர் திருவள்ளுவர்தம் சொரூபத்தினை அழகுற அமைப்பித்து அன்பளிப்புச் செய்துள்ளமையானது கல்லூரியின் அமைப்பின் அழகிற்கு அழகு சேர்க்கும் அம்சமாக அமைந்துள்ளது. கல்லூரிக்கு கலைப்பொலிவளித்த அத்தம்பதயினருக்கு எமது பாடசாலைச் சமூகத்தின் சார்பில் மேலான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோன்று எமது கல்லூரியில் இரண்டாவது எழுச்சியென விதந்துரைக்கப்படும் இன்றைய கல்லூரி வளர்ச்சியின் அடிக்கட்டுமானத்திற்கு காத்திரமான பங்களிப்புச் செய்த இவ்விழாவின் பிரதம விருந்தினர் உயர்திரு. சிவலிங்கம் சத்தியசீலன் - (செயலாளர், கல்வி பண்பாட்லுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, வடமாகாணம், முன்னைநாள் கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் ஆற்றல்மிகு பிரதேச செயலர்) அவர்களுக்கு எமது கல்லூரிச் சமூகம் என்றென்றும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளது. யுத்தத்தால் சிதைவடைந்து சமநிலை குலைந்திருந்த எமது கல்லூரிக் காணியினை உரிய வகையில் சீர்செய்வதற்கு அவராற்றிய பங்களிப்பு அளப்பரியது. அதனையொட்டியே பல அபிவிருத்திப் பணிகள் இக்கல்லூரியில் முன்னெடுக்கப்பட்டன. இன்று இக்கல்லூரியின் யுத்த வடுக்களில் இருந்த இறுதிக் கட்டிடமான இராசலிங்கம் மணிமண்டபத்தினை உள்ளக விளையாட்டரங்காக மாற்றியமைப்பதற்கு காலமறிந்து அவர் செய்த அரிய உதவியினால் அம்மண்டபம் புதுப் பொலிவு பெற்று வருகின்றது. இதனால் இக்கல்லூரியின் வரலாற்றில் திரு.சி.சத்தியசீலன் அவர்களுடைய பெயர் ஆழ இடம்பிடித்துள்ளது. இன்றைய நிலையில் எமது பாடசாலைக்கு ஒரு 120'x25' அளவுப் பரிமாணமுடைய வகுப்பறைகள் மற்றும் நிர்வாக அலகு கொண்ட கட்டிடத் தொகுதியொன்று கிடைக்கப் பெறுமேயாயின் மாணவர் விடுதிகளில் நடைபெற்று வருகின்ற வகுப்புக்களை அக்கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்வதன்மூலம் மாணவர் விடுதிகளை மீண்டும் ஆரம்பித்து மாகாணத்திலுள்ள அனைத்து மாணவர்களுக்கும் சேவை செய்ய வாய்ப்பேற்படும். நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் அபிவிருத்திப் பாதையில் இது ஒரு இறுதி முன்னெடுப்பாக அமையுமென எண்ணுகிறேன். அரசு முன்னெடுத்து வரும் 1000 இடைநிலைப் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள எமது கல்லூரியில் இத்தேவையினை எவ்வகையிலாவது நிறைவு செய்வதற்கு ஆவன செய்யுமாறு கௌரவ செயலாளர் அவர்களை பாடசாலைச் சமூகத்தின் சார்பில் அன்போடு வேண்டுகின்றேன்.

புகழ்பூத்த இக்கல்லூரியானது பல கல்விமான்களையும் உயர்பதவி அணியினரையும் வாழ்வாங்கு வாழும் பல்லாயிரக் கணக்கான நன்மக்களையும் கடந்த காலத்தில் உருவாக்கியது. இதன் புதல்வர்கள் நாடளாவிய ரீதியிலும் உலகளாவிய ரீதியிலும் உன்னத வாழ்வு வாழ்ந்து வருகின்றனர். லண்டன், கனடா, அவுஸ்திரேலியா

முதலான நாடுகளிலுள்ள எமது பழைய மாணவர்கள் எமது கல்லூரியில் இதுவரை ஏற்படுத்தப்பட்ட அபிவிருத்திப் பணிகளில் அமைப்பு ரீதியாகவும் தனிப்பட்ட ரீதியிலும் காத்திரமான பங்களிப்பினை நல்கியுள்ளனர். தொடர்ந்தும் எமக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கி வருகின்றனர். தேசியப் பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டு ஓராண்டேயாகின்ற நிலையிற்கூட தேசிய மட்டத்தில் பல பங்களிப்புக்களையும் கவனயீர்ப்புக்களையும் பாராட்டுக்களையும் பெற்று தேசியரீதியில் முன்னிலை பெறுகின்ற இன்றைய நிலையில் எமது பாடசாலை சமூகத்திடமிருந்து குறிப்பாக புலம் பெயர்ந்து வாழ்கின்ற எங்கள் பழைய மாணவர்களிடமிருந்து நிறைவான ஆதரவினையும் உதவிகளையும் கல்லூரி ஆவலோடு எதிர்பார்த்து இருக்கின்றது. எமது கல்லூரியின் தேவைகளில் உள்ளீடுசார் வளங்கள் எமது பாடசாலைச் சமூகத்திலிருந்தே வழங்கப்படுதல் வேண்டும் என்பது இன்றைய நடைமுறையாகவுள்ளது. இதனை ஒட்டுமொத்தமான எமது புலம்பெயர்வாழ் பழைய மாணவர்களிடமும் நலன் விரும்பிகளிடமும் சமர்ப்பிக்கின்றேன். இக்கல்லூரியானது ஒரு ஊருக்குச் சொந்தமானதோ ஒரு சமூகத்துக்குச் சொந்தமானதோ ஒரு வர்க்கத்தினருக்குச் சொந்தமானதோ அல்ல. இது வடமராட்சிப் பிரதேச ஒட்டுமொத்த மக்களினதும் தேவையறிந்து அவர்களுக்கான கல்வி மற்றும் சமூக சேவையை ஆற்றும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்ட ஒரு கல்லூரியாகும். ஆண், பெண் மாணவர்கள் கலந்து படிப்பதால் ஏற்படும் ஆளுமை மற்றும் ஆரோக்கியமான சமூக விருத்திப் பண்பினை மாணவ்களிடம் வளர்த்தெடுப்பதற்கு கலவன் பாடசாலைகளே உகப்பானவை என்னும் உயர்ந்த கல்விச் சிந்தனையின் அடிப்படையில் இயங்கி வருகின்ற இக்கல்லூரியானது இப்பிரதேச மக்கள் அனைவருக்கும், ஏன், இப்பிரதேசத்திற்கு அப்பாலும் மக்கள் சேவை செய்யும் கட்டமைப்பைக் கொண்டதாகும். கல்லூரித் தோற்றத்தின் நோக்கமும் அதுவே. இதனை இப்பிரதேச மக்கள் அனைவரும் புரிந்துகொண்டு பயன்படுத்தப் பழகிக்கொள்ளல் வேண்டும். அண்மைக்காலத்தில் இக்கல்லூரியின் மாணவர் தொகை அபரிமிதமாக அதிகரித்தமையும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலங்களில் சுறுசுறுப்பாக்கப்பட்டமையும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் அதிகளவு மாணவருக்கு வாய்ப்புக்களை வழங்கும் வகையில் அதிக எண்ணிக்கையிலான இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு விருத்தி கண்டுவருவதும் பாடசாலையின் சுற்றுப்புறம் அழகுற மேம்படுத்தப்பட்டுள்ளமையும் அனைத்துத் துறைகளும் இயங்குநிலைக்கு உட்படுத்தப் பட்டமையும் கல்லூரியின் கணனித்துறை விருத்தியடைந்தமையும் கல்லூரிச் சமூக உறவு உத்தம நிலைக்கு உயர்ந்தமையும் இக்கல்லூரி ஒரு தேசியப் பாடசாலையாக தரமுயர்த்துவதற்கு அடிப்படையாக அமைந்தன. இக்கல்லூரியின் சமூக சேவைகள், பொது நிகழ்வுகளுக்கான பங்களிப்புக்கள் முதலியன இக்கல்லூரியினை வடமராட்சிப் பிரதேசத்தின் மையத் தலைமை நிலைக்கு உயர்த்தியுள்ளன. எதிர்வரும் ஆண்டில் முறைசாராக் கல்விப் பிரிவினை முறைப்படி ஆரம்பித்து அதனூடாக நவீன முறையிலான தொழிற் பயிற்சிகள் (மரவேலை, அலுமினிய அமைப்பு வேலை, மின்னிணைப்பு, கணனித் தொழினுட்பம் முதலான ) வழங்குவதற்கு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எமது வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் திரு.சி.நந்தகுமார் அவர்களது ஆதரவு இதற்குக் கிடைத்துள்ள நிலையில் இப்பிரதேசத்தில் இயங்கி வந்த உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனமான "ஊற்று" நிறுவனமும் அதன் பணிப்பாளராகிய திரு. விக்னேஸ்வரன் அவர்களும் இதற்கான கருவிகள் மற்றும் ஆலோசனை உதவிகளை வழங்கியுள்ளனர். இந்நிகழ்ச்சித் திட்டமானது இக்கல்லூரியில் பயின்று வெளியேறிய மாணவர்கள் மற்றும் பயின்று கொண்டிருக்கின்ற மாணவர்களுக்கு மாத்திரமன்றி இப்பிரதேசத்திலுள்ள ஏனைய பாடசாலைகளின் கல்வி கற்று வெளியேறிய மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கும் நோக்கில் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கு எமது கல்விச் செயலாளரது ஆதரவினையும் ஆலோசனை களையும் வேண்டி நிற்கின்றோம். இன்றைய நிகழ்வின் பெரு விருப்போடும் முகமலர்வோடும் வருகைதந்து கலந்துகொண்டிருக்கும் அனைவருக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு எல்லோரும் இன்புற்றிருக்கவென இறைவனை வேண்டி நிறைவுசெய்கின்றேன்.

01. திரு.செ.சேதுராஜா (அதிபர்)
02. திரு.க.கிருஷ்ணகுமார் (பிரதி அதிபர்)
03. திரு.அ.அரியரத்தினம் (பிரதி அதிபர்)
04. திருமதி.இ.சிவராஜா (பகுதித் தலைவர்)
05. திருமதி.ம.நற்குணலிங்கம் (பகுதித் தலைவர்)
06. திரு.ச.சரவணபவன் (பகுதித் தலைவர்)
07. திரு.ச.உருத்திரகுமார் (பகுதித் தலைவர்)
08. திரு.வீ.சுதர்சன்
09. திரு.த.பாலகுமார்
10. திருமதி.ம.விக்னேஸ்வரன் (குணவள உள்ளீடு)
11. திருமதி.சா.ஸ்ரீஸ்குமார்
12. திருமதி.யோ.கந்தப்பு
13. திரு.த.தவச்செல்வம் (விளையாட்டு)
14. திரு.ஏ.விஜிதரன் (விசேட கல்வி)
15. திருமதி.ச.கீர்த்தனா (வழிகாட்டலும் ஆலோசனையும்)

**மாணவர் ஒழுக்காற்று நடவடிக்கைக் குழு**

திரு.செ.சேதுராஜா (அதிபர்)
திருமதி.இ.சிவராஜா
திரு.ச.சரவணபவன்
திரு.வீ.சுதர்சன்

## கல்லூரியின் குணவள உள்ளீட்டுக் குழு - 2012

**கொள்வனவுக் குழு**

**தலைவர் :** திரு.செ.சேதுராஜா (அதிபர்)
**2 வது அங்கத்தவர் :** திருமதி.இ.சிவராஜா (பகு.தலைவர்)
**3 வது அங்கத்தவர் :**
திரு.ச.உருத்திரகுமார் (பகுதித்தலைவர்)
திருமதி.இ.அருளானந்தம்
திருமதிம.விக்னேஸ்வரன்
திரு.வீ.சுதர்சன்
திருமதி.சா.ஸ்ரீஸ்குமார்
திருமதி.சூ.ஸ்ரீபவன்
திரு.சி.மதுசூதனன்
திரு.த.தவச்சேல்வம்

**மதிப்பீட்டுக் குழு**

**தலைவர் :** திரு.க.கிருஷ்ணகுமார் (பிரதி அதிபர்)
**2 வது அங்கத்தவர் :** திரு.அ.அரியரத்தினம் (பிரதி அதிபர்)
**3 வது அங்கத்தவர் :**
திருமதி.ம.நற்குணலிங்கம் (பகுதித்தலைவர்)
திரு.ச.சரவணபவன் (பகுதித்தலைவர்)
திரு.இ.குகதாசன்
திரு.கு.அம்பிகைபாகன்
திருமதி.தி.தவநேசன்
திரு.க.குணசுந்தர்
திரு.க.உதயசீலன்
திருமதி.வை.பிரவாகினி
திரு.வை.விஜிதரன்
**4 வது அங்கத்தவர் :**
செல்வன்.கி.பிரணவன் (சிரேஷ்ட மாணவர் தலைவன்)

## மாணவர் மன்றச் செயற்பாடுகள்


இப்பாடசாலையில் மாணவர் மன்றச் செயற்பாடுகள் கிரமமாகவும் பல்துறைசார்ந்தும் இடம்பெற்று வருகின்றன. வாராவாரம் புதன்கிழமைகளில் 40 நிமிடநேரம் திட்டமிட்ட இச்செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்படுகின்றது. மாணவர் கலை மன்றங்களும் (கனிஸ்ட, சிரேஸ்ட) பாடரீதியான மன்றங்களும் (கணித விஞ்ஞானம், ஆங்கிலம்) ஒன்றுவிட்ட வார ஒழுங்கில் மாணவர்களால் முறையாக நடத்தப்பட்டு வருகின்ற அதேவேளையில் தேவைகருதிய பல விசேட மன்றங்களும் இயங்கிவருகின்றன. அவையாவன,

- சுற்றாடல் கழகம் - சுற்றாடல் மேம்பாட்டுச் செயற்பாடுகள் (டெங்கு ஒழிப்பு உட்பட)
- சுகாதாரக் கழகம் - மாணவர்களது சுகாதாரம் போஷாக்குச் செயற்பாடுகள் (சிறந்த முறையில் உருவாக்கப்பட்ட முதலுதவிப் பிரிவு உள்ளது)
- சாரணர் படையணி ஆண், பெண்) - பாடசாலையிலும் சமூகத்திலும் சேவையாற்றி வருகின்றன.
- வலு முகாமைத்துவக்குழு - வலு முகாமைத்துவ முன்னோடிச் செயற்றிட்டங்களை அமுலாக்குதல்
- தகவல் தொடர்பாடல் கழகம் - தகவல் தொடர்பாடல் மேம்பாட்டுச் செயற்பாடுகள்
- சமய மன்றங்கள் (இந்து, கிறிஸ்தவ) - வாராந்த ஆராதனை நிகழ்வுகள், சமயம் சார் விசேட நிகழ்வுகள் (நவராத்திரி, ஒளிவிழா)
- போக்குவரத்துக் கழகம் - மாணவரின் அன்றாட போக்குவரத்து ஒழுங்குகள்
- யுனெஸ்கோ கழகம் - மாணவர் தலைமைத்துவ மற்றும் இடைவினை மேம்பாடு
- மதர் ஸ்ரீலங்கா மன்றம் - வருடாந்த தேசப்பற்றுசார் மதர் ஸ்ரீ லங்கா நிகழ்ச்சிகள், போட்டிகள்
- அனர்த்த முகாமைத்துவக்குழு

# J/NELLIADY MADHYA MAHA VIDYALAYAM

## National School

### ORGANIZATION STRUCTURE



இக்கல்லூரியில் 2011 இல் பாடசாலையின் செயற்பாடுகள் பன்முகப்பட்டதாகவும் திருப்தியளிக்கக்கூடிய விதத்திலும் அமைந்தன. இச்சங்கத்தின் செயற்பாடுகள் பாடசாலையின் பௌதிகவள மெம்பாட்டிலும் சுற்றுப்புறத் தூய்மை, சுற்றுப்புற அழகுபடுத்தல், மாணவர் நலனோம்பல், விளையாட்டு மற்றும் அதனோடிணைந்த இணைப்பாடவிதான நடவடிக்கைகளிலும் திருப்தியளிக்கக்கூடிய விதத்தில் அமைந்தன.

2011ஆம் ஆண்டில் பாடசாலை யில் நிறைவேற்றிய செயற்பாடுகளும் செயற்றிங்களும்.

1. தொண்ணூறாவது ஆண்டுவிழா நிறைவுகள்.
இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு தொண்ணூறு ஆண்டுகள் நிறைவுற்றதை நினைவுகூரும் வகையில் கல்லூரியிளன் அபிவிருத்தி விழிப்புணர்வு ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டு பல அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு நிறைவுசெய்யப்பட்டுள்ளன. இந்நிகழ்வுகள் கல்வி, கலை, விளையாட்டு முதலிய துறைகளில் மாவட்ட மட்டத்தில் சிறப்பாக ஒழுங்குபடுத்தப்பட்டு 2011 ஜூலை 15, 16, 17ம் திகதிகளில் கொண்டாடப்பட்டன.

2. கலையரங்க வேலைகளின் பூர்த்தி :
வடக்கு மாகாணத்திலேயே மிகப் பெரியது எனக் கூறத்தக்க அழகிய கலையரங்கம் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பங்களிப்புடன் அழகாககப் பூர்த்தி செய்யப்பட்டு 2011 ஜூலை 4ம் திகதி சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இக்கலையரங்கத்தில் மேடையடைப்பு, ஒலியமைப்பு, இருக்கைகளின் ஏற்பாடு என்பவற்றினை கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையில் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டதுடன் கலையரங்கத்தின் அழகிய பூந்தோட்ட முகப்பும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் அமைக்கப்பட்டது.

3. கட்டிட இடிபாடுகளை அகற்றியமை.
1987 ஆம் ஆண்டு இடம்பெற்ற பாரிய யுத்த அநர்த்தத்தினால் சேதமடைந்த கட்டிடத்தின் இடிபாடுகள் இதுவரைகாலமும் அகற்றப்படாதிருந்த நிலையில் 2011 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வடமாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் ஆலோசனையுடன் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் நீக்கித் துப்புரவு செய்யப்பட்டது.

4. விளையாட்டுப் போட்டி :
கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் 2011 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13ம் திகதி சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்பட்டது.

5. பரிசளிப்பு விழா :
கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா 2011.07.15 அன்று வெகு சிறப்பாக புதிய கலையரங்கத்தில் நடத்தி முடிக்கப்பட்டன. யாழ்ப்பாணப் பல்கலைக் கழக புள்ளிவிபரவியல்துறைத் தலைவர் கலாநிதி ஸ்ரீசற்குணராஜா அவர்கள் அவர்தம் பாரியார் சகிதம் முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

6. நவராத்திரி விழா :
வருடாவருடம் கொண்டாடப்படும் நவராத்திரி விழா 10 நாட்கள் அனுட்டிக்கப்பட்டு இறுதி மூன்று நாட்களும் கலை, கலாசார, பக்தி நிகழ்ச்சிகளுடன் கொண்டாடப்பட்டன. இதற்கான ஏற்பாடுகளையும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மேற்கொண்டது.

7. ஆசிரியர் தின விழா :
2011 இன் உலக ஆசிரியர்தின விழா மிகச்சிறப்பாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு முன்னெடுக்கப்பட்டது. ஆசிரியர்கள் சிறப்பாக விருது வழங்கி உபசரிக்கப்பட்டனர். பாடசாலை அபிவிருத்திச் சங்கம் இதனைச் சிறப்பாக நடத்தி முடித்தது.

8. வள்ளுவர் திருச்சொரூப அமைப்பும் திறப்பு விழாவும்.
கல்லூரியின் நலன்விரும்பியும் இப்பிரதேசத்தின் சமூக மேம்பாட்டுப் புரவலருமாகிய திரு ந.பாஸ்கரன் அவர்கள் அவர்தம் பாரியார் திருமதி இந்திராணி பாஸ்கரன் அவர்களது அன்பின் காணிக்கையாக ஐந்தரை இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட திருவள்ளுவர் சொரூபம் 2011.10.05ஆம் திகதி கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளையும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமே மேற்கொண்டது.

9. உள்ளகவீதி புனரமைப்பு :

கல்லூரியின் உள்ளகவீதிகள் ரூபா. ஒரு இலட்சம் செலவில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் 2011.08.13 இல் செப்பனிடப்பட்டுப் புனரமைக்கப்பட்டது.

10. திருத்தவேலைகள் :

- யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் ரூபா. 65,025/- செலவில் நூலகத்தின் கூரைத் திருத்தமும் வகுப்பறைத் திருத்தங்களும் இடம்பெற்றன. அத்துடன் ரூபா. 47,620/- செலவில் நீர்த்தாங்கி மற்றும் முன்பக்க மதில் என்பன பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் திருத்தி அமைக்கப்பட்டன.
- ரூபா 532,120/- செலவில் ஆராதனை மண்டபத்தின் வர்ணப் பூச்சு வேலைகளும் மிகுதி வேலைகளும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் செய்து முடிக்கப்பட்டன.
- பல்நோக்கு அறைகளுக்கு ரூபா. 43,740/- செலவில் மின்விசிறிகள் அமைக்கப்பட்டன.

11. கல்விக் கண்காட்சி :

2011 ஆம் ஆண்டுக்கான கல்லூரிக் கல்விக் கண்காட்சி ஆகிய திகதிகளில் சிறந்த ஏற்பாடுகளுடன் செய்து முடிக்கப்பட்டன.

12. வானியல் பாசறை :

தரம் 9, 10 வகுப்பு மாணவர்களுக்கான வானியல் பாசறை நிகழ்வுகள் வினைத்திறனுடன் மேற்கொள்ளப்பட்டு மாணவர் பயன்பெற வழிவகுக்கப்பட்டது.

13. சமய நிகழ்வுகள் :

மாணவர்களிடம் ஆன்மீக விருத்தியினையும் மன ஒருமைப்பாட்டினையும் ஏற்படுத்தும் வகையில் சமயம் மற்றும் ஒழுக்க விருத்திச் செயற்பாடுகள் பல இவ்வாண்டில் முன்னெடுக்கப்பட்டன. இந்து, கிறிஸ்தவ, பௌத்த மதப் பெரியார்களை வரவழைத்து ஆன்மீக மேம்பாட்டு நிகழ்வுகள் நடத்தி முடிக்கப்பட்டன.

14. மதிய உணவும் போஷாக்கும்:

உலக உணவுத்திட்டத்தின்கீழ் தரம் 6 தொடக்கம் தரம் 9 வரையான வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவு தரமாகவும் ஒழுங்காகவும் வழங்கப்படுவதற்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் தரம் 10 தொடக்கம் தரம் 13 லவரையான வகுப்பு மாணவர்களுக்கும் அது விரிவுபடுத்தப்பட்டு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் வழங்கப்பட்டது.

15. பாடசாலைத் தோட்டங்கள் :

பாடசாலையில் சிறப்பான பாடசாலைத் தோட்டச் செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுவதுடன் பரிபூரணமான மூலிகைத் தோட்டமும் அமைத்துப் பராமரிக்கப்படுகின்றது. இவற்றிலிருந்து கிடைக்கும் உற்பத்திகள் மாணவர் மதியபோசனச் செயற்றிட்டத்திற்கு வெற்றிகரமாகப் பயன்படுத்தப்படுகின்றன. பாடசாலைத் தோட்டம் மற்றும் மூலிகைத்தோட்டப் போட்டிகளில் எமது பாடசாலையானது வருடாவருடம் பல மட்டங்களில் வெற்றி பெற்றுப் பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெற்று வருகின்றது.

16. மாணவர் நலனோம்பு செயற்பாடுகள் :

கல்லூரிக்கென போதியளவு கல்விசாரா ஊழியர்கள் இல்லாதபோதிலும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் மாணவர்களுக்கான மலசலகூட சுகாதார சேவைகள் நீர் வசதிகள் பராமரிப்புக்கள், மின்சார வசதிகள், பராமரிப்புக்கள் தரமான சிற்றுண்டிச்சாலை வசதிகள், சுற்றுச்சூழல் துப்புரவு சேவைகள் முதலியன பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

- சுகாதாரத் தொழிலாளி, துப்புரவுத் தொழிலாளி, தோட்டத்தொழிலாளி, முகாமைத்துவ உதவியாளர், முதலியோருக்கான 2011 ஆம் ஆண்டுக்கான மொத்தச் செலவினம் ரூபா. இச்செலவினம் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினாலேயே ஈடுசெய்யப்படுகின்றது.

- மாணவர்களுக்கான மருத்துவ வசதிகள் : கல்லூரியில் சிறப்பான முதலுதவி அறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் அன்றாடம் சுகவீனமுறும் மாணவர்கள் ஓய்வெடுக்கவும் தற்காலிக மருத்துவ வசதி பெறவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. தேவையேற்படின் அவர்களை வைத்தியசாலைக்கோ அல்லது அவர்களின் இருப்பிடங்களுக்கோ அழைத்துச் செல்வதற்கு முச்சக்கரவண்டிச் சேவையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான செலவுகளையும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமே மேற்கொண்டு வருகின்றது. அத்துடன் மாணவர்களுக்கான வைத்தியப் பரிசோதனைகளை ஒழுங்காக மேற்கொள்வதற்கும் இந்த முதலுதவி அலகே பயன்படுத்தப்படுகின்றது.

## Student Details (2012)

| Grade | | Tamil Medium | | | English Medium | | | Total | | | Grade Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Boys | Girls | Total | Boys | Girls | Total | Boys | Girls | Total | |
| 6A | | 13 | 5 | 18 | 5 | 8 | 13 | 18 | 13 | 31 | |
| 6B | | 20 | 11 | 31 | | | | 20 | 11 | 31 | |
| 6C | | 25 | 6 | 31 | | | | 25 | 6 | 31 | |
| 6D | | 24 | 5 | 29 | | | | 24 | 5 | 29 | |
| 6E | | 22 | 8 | 30 | | | | 22 | 8 | 30 | 152 |
| 7A | | 17 | 12 | 29 | 6 | 4 | 10 | 23 | 16 | 39 | |
| 7B | | 28 | 9 | 37 | | | | 28 | 9 | 37 | |
| 7C | | 27 | 9 | 36 | | | | 27 | 9 | 36 | |
| 7D | | 33 | | 33 | | | | 33 | 0 | 33 | 145 |
| 8A | | 13 | 10 | 23 | 2 | 5 | 7 | 15 | 15 | 30 | |
| 8B | | 23 | 11 | 34 | | | | 23 | 11 | 34 | |
| 8C | | 26 | 6 | 32 | | | | 26 | 6 | 32 | |
| 8D | | 29 | 4 | 33 | | | | 29 | 4 | 33 | 129 |
| 9A | | 13 | 14 | 27 | 1 | 2 | 3 | 14 | 16 | 30 | |
| 9B | | 18 | 6 | 24 | | | | 18 | 6 | 24 | |
| 9C | | 19 | 8 | 27 | | | | 19 | 8 | 27 | |
| 9D | | 20 | 5 | 25 | | | | 20 | 5 | 25 | 106 |
| 10A | | 13 | 10 | 23 | 4 | 8 | 12 | 17 | 18 | 35 | |
| 10B | | 18 | 16 | 34 | | | | 18 | 16 | 34 | |
| 10C | | 28 | 5 | 33 | | | | 28 | 5 | 33 | |
| 10D | | 22 | 6 | 28 | | | | 22 | 6 | 28 | 130 |
| 11A | | 19 | 9 | 28 | 2 | 5 | 7 | 21 | 14 | 35 | |
| 11B | | 24 | 11 | 35 | | | | 24 | 11 | 35 | |
| 11C | | 21 | 9 | 30 | | | | 21 | 9 | 30 | |
| 11D | | 28 | | 28 | | | | 28 | 0 | 28 | 128 |
| 11R | | 28 | 10 | 38 | | | | 28 | 10 | 38 | 38 |
| 2014 | 12A1 | 17 | 9 | 26 | | | | 17 | 9 | 26 | 58 |
| | 12A2 | 25 | 7 | 32 | | | | 25 | 7 | 32 | |
| | 12C1 | 12 | 7 | 19 | | | | 12 | 7 | 19 | 39 |
| | 12C2 | 13 | 7 | 20 | | | | 13 | 7 | 20 | |
| | 12M1 | 12 | 4 | 16 | | | | 12 | 4 | 16 | |
| | 12M2 | 12 | 5 | 17 | | | | 12 | 5 | 17 | 50 |
| | 12Sci | 12 | 5 | 17 | | | | 12 | 5 | 17 | |
| 2013 | 13A1 | 25 | 12 | 37 | | | | 25 | 12 | 37 | 61 |
| | 13A2 | 18 | 6 | 24 | | | | 18 | 6 | 24 | |
| | 13C1 | 13 | 7 | 20 | | | | 13 | 7 | 20 | 40 |
| | 13C2 | 15 | 5 | 20 | | | | 15 | 5 | 20 | |
| | 13M | 16 | 9 | 25 | | | | 16 | 9 | 25 | 42 |
| | 13Sci | 7 | 10 | 17 | | | | 7 | 10 | 17 | |
| 2012 | 13A1 | 19 | 6 | 25 | | | | 19 | 6 | 25 | 53 |
| | 13A2 | 19 | 9 | 28 | | | | 19 | 9 | 28 | |
| | 13C | 16 | 4 | 20 | | | | 16 | 4 | 20 | 20 |
| | 13M | 24 | 5 | 29 | 2 | 2 | 4 | 26 | 7 | 33 | 42 |
| | 13Sci | 3 | 4 | 7 | | 2 | 2 | 3 | 6 | 9 | |
| **Total** | | **849** | **326** | **1175** | **22** | **36** | **58** | **871** | **362** | **1233** | **1233** |

## No of Students by Grades' Span

| Grade | Tamil Medium | | | English Medium | | | Total | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Boys | Girls | Total | Boys | Girls | Total | Boys | Girls | Total |
| Gr 6-9 | 370 | 129 | 499 | 14 | 19 | 33 | 384 | 148 | 532 |
| Gr 10-11 | 201 | 76 | 277 | 6 | 13 | 19 | 207 | 89 | 296 |
| Gr 12-13 | 278 | 121 | 399 | 2 | 4 | 6 | 280 | 125 | 405 |
| Total | 849 | 326 | 1175 | 22 | 36 | 58 | 871 | 362 | 1233 |

2011 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் :

தேசிய மட்டச் செயற்பாடுகள் :

1. டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டம் :
